பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 05 2025 **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. குஜராத்தின் **Dahod** நகரில் உள்ள ரயில் என்ஜின் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட முதலாவது மின்சார ரயில் என்ஜினை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

2. இந்தியா உடனான இருதரப்பு உறவு மேலும் வலுப்பெற்றுள்ளதாக கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

3. இந்தியா – மாலத்தீவு இடையேயான உயர்நிலைக்குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

4. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக அடுத்த மாதம் 12-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

5. தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Pawan Bartwal** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>>>>>

குஜராத்தின் **Dahod** நகரில் உள்ள ரயில் என்ஜின் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட முதலாவது மின்சார ரயில் என்ஜினை பிரதமர் திரு நரேந்திர மோடி குஜராத்தின் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

மேலும், அங்கு என்ஜின் உற்பத்தி பிரிவையும் அவர் பார்வையிட்டார்.

முன்னதாக, பிரதமர் இன்று காலை வதோதராவில் நடைபெற்ற பேரணி ஒன்றில் பங்கேற்றார்.

இப்பேரணியில் பங்கேற்ற பொதுமக்கள் கையில் தேசிய கொடி ஏந்தியும், மலர் தூவியும் பிரதமரை வரவேற்றனர்.

Dahod, Bhuj, காந்தி நகரில் 82 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கிவைத்து அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

நாளை காந்திநகரில் நடைபெறும் குஜராத் நகர்ப்புற வளர்ச்சி அமைப்பின் 20 ஆண்டுகால நிறைவு விழாவில் பிரதமர் பங்கேற்கிறார்.

இதற்கிடையே, எமது செய்தியாளரிடம் பேசிய மேற்கு ரயில்வேயின் தலைமை செய்தித்தொடர்பாளர் திரு வினித் அபிஷேக், **Dahod**-ல் உள்ள மின்சார ரயில் என்ஜின் உற்பத்தி ஆலை உள்நாட்டு தேவைகளை நிறைவு செய்வதோடு, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு என்ஜின்களை ஏற்றுமதி செய்யும் என்று தெரிவித்தார்.

நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மின்சார ரயில் என்ஜினானது நான்காயிரத்து 600 டன் எடை கொண்டது என்றும், குளிர்சாதன வசதி கொண்டது என்றும், விபத்துகளை தடுக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அமைப்பினை கொண்டது என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>>>>

இந்தியா உடனான இருதரப்பு உறவு மேலும் வலுப்பெற்றுள்ளதாக கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தொலைபேசியில் திருமதி அனிதா ஆனந்தை தொடர்புகொண்டு பேசிய நிலையில், அவர் இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பு, பரஸ்பர முன்னுரிமைகளை மேம்படுத்துதல் குறித்து தங்களது பேச்சு ஆக்கப்பூர்வமானதாக அமைந்தது என்று திருமதி அனிதா ஆனந்த் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>>>>

இந்தியா – மாலத்தீவு இடையேயான உயர்நிலைக்குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ள மாலத்தீவு வெளியுறவு அமைச்சர் டாக்டர் அப்துல்லா கலீல், இதில் பங்கேற்கிறார்.

இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பில் முன்னேற்றம் காணும் வகையில், இப்பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனைத்தொடர்ந்து, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை, டாக்டர் அப்துல்லா கலீல் சந்தித்து பேசுகிறார்.

<<<<<<>>>>>>>>>>

பிரிட்டனை சேர்ந்த லிவர்பூல் பல்கலைக்கழகம் உடனான பரிமாற்ற ஒப்பந்த நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தலைமை வகித்தார்.

பல்கலைக்கழக மானியக்குழு தலைவர் திரு வினித் ஜோஷி, இந்த பரிமாற்ற ஒப்பந்த கடிதத்தை லிவர்பூல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டிம் ஜோன்சிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், இந்தியாவுக்கான பிரிட்டன் தூதர் லின்டி கேமரோன் உட்பட பலர் பங்கேற்றனர்.

இதனைத்தொடர்ந்து, பெங்களூருவில் லிவர்பூல் பல்கலைக்கழக வளாகம் அமையவுள்ளது.

<<<<<<>>>>>>>>>>

நான்கு மாநிலங்களுக்கு உட்பட்ட 5 சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

குஜராத்தில் 2 தொகுதிகள், கேரளா, மேற்குவங்கம், பஞ்சாப் மாநிலங்களில் தலா ஒரு தொகுதிக்கு அடுத்த மாதம் 19ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

அடுத்த மாதம் 2ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளாகும்.

3ஆம் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

5ஆம் தேதி வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளாகும்.

இந்தத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 23ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

<<<<<<>>>>>>>>>>

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தின் மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படும் விழாவில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கலந்துகொள்ள உள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாட்டுப்பணிகளை திரு ராஜேந்திரன் இன்று பார்வையிட்டார்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த மாதம் 12-ஆம் தேதியன்று, நடைபெறும் விழாவில் ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை முதலமைச்சர் தொடங்கிவைக்க உள்ளதாகவும், ஒரு லட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது என்றும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>>>>

ஜார்கண்டில் நக்சலைட் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

காவல்துறை கண்காணிப்பாளர் திரு குமார் கௌரவ் தலைமையிலான குழுவுக்கும், மாவோயிஸ்ட் இயக்கத்தை சேர்ந்தவர்களுக்கும் இடையே **Netarhat** காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில், ஐந்து லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்ட மாவோயிஸ்ட் இயக்கத்தை சேர்ந்த மனீஷ் யாதவ் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பத்து லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்ட **Kundan Kherwar** என்பவர் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>>>>

ரஷ்யா – யுக்ரைன் நாடுகள் இடையே 303 கைதிகள் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 16-ஆம் தேதியன்று இஸ்தான்புல்லில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது ஆயிரம் கைதிகளை விடுதலை செய்ய இருநாடுகளும் ஒப்புக்கொண்ட நிலையில், இந்த பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

கீவ் நகரில் இருந்து திரும்பியுள்ள ரஷ்ய வீரர்கள், பெலாரசில் மருத்துவம் மற்றும் உளவியல் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

யுக்ரைன் ராணுவம், தேசிய பாதுகாப்புப்படை, எல்லை பாதுகாப்புப்படை மற்றும் போக்குவரத்து துறையை சார்ந்தவர்கள் ரஷ்யாவால் விடுவிக்கப்பட்டுள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்சி தமது சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>>>>>

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு கயானா உறுதுணையாக இருக்கும் என்று அந்நாட்டு துணை அதிபர் திரு பாரத் ஜக்தியோ தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக உலக நாடுகளிடம் விளக்கம் அளிக்க மத்திய அரசு நியமித்துள்ள காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு சசிதரூர் தலைமையிலான அனைத்துக்கட்சிக்குழுவை சந்தித்து பேசியபோது அவர் இக்கருத்தினை வெளிப்படுத்தினார்.

இந்தியாவின் நிலையை கயானா துணை அதிபர் நன்கு புரிந்துகொண்டதாகவும், அவரிடம் ஆபரேஷன் சிந்தூர் குறித்து உரிய விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் திரு சசிதரூர் தெரிவித்துள்ளார்.

பக்ரைன் சென்றுள்ள பிஜேபி உறுப்பினர் திரு பைஜெயந்த் பாண்டா தலைமையிலான அனைத்துக்கட்சி குழுவினர், பக்ரைன் துணை பிரதமர் **Shaikh Khalid Bin Abdulla** சந்தித்து பேசினர்.

அப்போது, எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>>>>>>

கேரளா மற்றும் மாஹேவின் ஒரு சில இடங்களில் இன்று இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன், மிக கனமழை முதல், இயல்புக்கு மாறான அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் நாளை முதல் அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை கன முதல், மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகாவின் கடலோர பகுதி மற்றும் தெற்கு உட்பகுதியில் உள்ள சில இடங்களில் இன்றும், நாளையும் கனமழை முதல், மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், யானாம், ராயலசீமா மற்றும் தெலங்கானாவில் அடுத்த நான்கு நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

நாளை முதல் 29-ஆம் தேதிவரை மழை தொடரும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

தமிழகத்தின் கோவை, நீலகிரி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், கோவை மாவட்டத்தில் பயணிகளின் பாதுகாப்பு கருதி, சுற்றுலாத் தலங்கள் மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Hariharan – 43 Sec.)

<<<<<<>>>>>>>>>>

தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Pawan Bartwal** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், கம்போடியாவின் **Sao Rangsey** –ஐ வென்றார்.

நார்வே செஸ் சாம்பியன் போட்டி இன்று தொடங்குகிறது.

Stavanger-வில் நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் குகேஷ், அர்ஜுன் எரிகேசி, கோனேரு ஹம்பி, வைஷாலி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

முதல் சுற்று ஆட்டத்தில் குகேஷ் - நார்வேயின் **Magnus Carlsen** -ஐ எதிர்கொள்கிறார்.

<<<<<<>>>>>